விலை சதம் 75 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 மார்கழி 18 றவி அவ் 5 இதழ் 32
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-1-82

## தும்பளைக்கிராமத்துக்கு நோர்வே அரசு உதவி

(புலோலி நிருபர்)

நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள தும்பளைக் கிராம சேவையாளர் பிரிவு பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது இதற்கான அபிவிருத்தித் திட்டத்தை செயற்படுத்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்பொள்ளப்பட்டு வருகின்றன.

நோர்வேயில் இருக்கும் தும்பளைக் கிராமத்தை சேர்ந்த திரு. கே.சிவராசா, தும்பளைக் கிராம சேவையாளர் பிரிவு அபிவிருத்திக்கென நோர்வே அரசின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவுள்ளார். இந்த அபிவிருத்தித் திட்டம் பற்றிய பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொள்வது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் தலைமையில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம், பருத்

(6-ம் பக்கம்பார்க்க)

★ நெடுந்தீவு வெடியரசன் கோட்டை

# பௌத்ததூபி அமைப்புவேலை நிறுத்தப்பட்டது!

## புதைபொருள் ஆணையாளர் நடவடிக்கை

(நமது சிறப்பு நிருபர்)

**நெடுந்தீவிலுள்ள வெடியரசன் கோட்டையில் திடீரென தலைதூக்கிய 'புனரமைப்பு' வேலைகள், மேலிடத்து உத்தரவு மீது நிறுத்திவைக்கப்பட்டுள்ளன!**

வெடியரசன் கோட்டையில் மூன்று பௌத்த தூபிகள் திடீரெனத் தோன்றியதும், இத்தூபிகளைத் தொல்பொருள் திணைக்களமே அமைத்துவருவதாகத் தெரிவிக்கப்பட்டதும் தெரிந்ததே. இது சம்பந்தமாக கடந்த மாதம் பத்தொன்பதாம் திகதி வெளியான ''ஈழநாடு'' இதழ்விபரமாகச்செய்தி வெளியிட்டிருந்தது.

ஒரு பௌத்த தூபி அரைவாசி வரை கட்டப்பட்டும், இரண்டு தூபிகள் அத்திபார மட்டத்திலும் காணப்படுகிறதென்றும், பௌத்த தூபிகள் பொது மக்களுக்கு ஐயம் ஏற்படாத வகையில் கால் இடைவிட்டு அமைக்கப்பட்டிருப்பதாகவும் இச்செயல் பொதுமக்களுக்கு மட்டுமின்றி தொல்லியலில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் ''ஈழநாடு'' தனது முதல்பக்கத் தலைப்புச் செய்தியில் தெரிவித்திருந்தது.

இச்செய்தியைத்தொடர்ந்து ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்கள ஆணையாளருடன் தொடர்பு கொண்டதன்பேரில் வெடியரசன் கோட்டையில் நடைபெறும் 'புனரமைப்பு' வேலைகள் அனைத்தும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக நடை

(6-ம் பக்கம் பார்க்க)

## காரை. மணிவாசகர் விழா 5-ம் திகதி ஆரம்பம்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசக சபையினர் வருடந்தோறும் ஈழத்துச் சிதம்பரத்தில் நடத்திவரும் மணிவாசகர் விழா இவ்வாண்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 4 நாட்கள் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இ. கனகசுந்தரம் விழாவை ஆரம்பித்து வைப்பார். மற்றைய நாட்களில் முறையே வித்துவான் க. முருகேசன், பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி திரு. கே. எஸ். மகேசன், சபைத்தலைவர் திரு. என். ஆர். எஸ். தேவதாசன் ஆகியோர் விழாவுக்குத் தலைமை தாங்குவார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சிரேஷ்ட விரிவுரையாளா கலாநிதி அ. சண்முகதாஸ், திருமதி அ. சண்முகதாஸ், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, பௌராணிக வித்தகர் வ. குகசர்மா, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். விநாயகமூர்த்தி ஆகியோரின் விரிவுரைகள் விழாவில் இடம் பெறும்.

இரண்டாம்நாள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வே. இராமக்கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் பட்டிமன்றத்தில் வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. க.சிவராமலிங்கம், வித்துவான் வசந்தா வைத்தியநாதன், பண்டிதர் ப. இராசகுரு, பண்டிதைபொன். பாக்கியம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (அ)

## தேசிய பந்தோபஸ்துசபை

டாக்கா, ஜன. 1

பங்களாதேஷில் 9 பேர் கொண்ட தேசிய பந்தோபஸ்து சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சபையின் தலைவராக அந்நாட்டின் ஜனதிபதி ஜஸ்டிஸ் அப்துல்சதார் நியமிக்கப்பட்டுள்ளார். இச்சபை பங்களாதேஷின் பந்தோபஸ்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இருக்குமென்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

### வெளி இணைப்பு இயந்திரம்

## இந்தியாவுக்கு கடத்தல் முயற்சி முறியடிப்பு!

(யாழ்ப்பாணம்)

இயந்திரப்படகின் வெளி இணைப்பு இயந்திரம் ஒன்றை இந்தியாவுக்கு கடத்திச் செல்ல முயன்ற ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குடத்தனையைச் சேர்ந்த எஸ். எதிர்மன்னசிங்கம் என்பவர் தனது படகின் வெளி இணைப்பு இயந்திரத்தைக் காணவில்லை என்று பருத்தித்துறை கடற்றெழில் இலாகாவில் புகார் செய்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை கடற்றெழில் இலாகா இன்ஸ்பெக்டர் விசாரணைமேற்கொண்டதன் பேரில் செம்பியன்பற்றைச் சேர்ந்த செபஸ்தியான் என்பவர் ஊர்காவற்றுறையில் வைத்து கைதுசெய்யப்பட்டார். இந்தியாவுக்குக் கடத்தப்படவிருந்த வெளி இணைப்பு இயந்திரம் ஊர்காவற்றுறைப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. (மா)

### யாழ். பஸ்நிலையத்தில்

# வாகன நெருக்கடி தவிர்க்க பொலிஸ் அதிபர் ஏற்பாடு

## 24 மணிநேரமும் பொலிஸ் ரோந்து

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு ஏற்பட்டுள்ள வாகன நெருக்கடியைத் தவிர்ப்பதற்கு பிரதிப்பொலிஸ் அதிபர் திரு. எம். பி. மார்த் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இத்திட்டத்தின்படி வீதிப் பரிசோதனை ரோந்துப் பொலிசார் 24 மணி நேரமும் நகரில் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சனநடமாட்டம்காரணமாகவும் வாகன நெருக்கடி காரணமாகவும் யாழ். பஸ் நிலையத்தையும், நவீன மார்க்கட்டையும் அடுத்துள்ள முக்கிய வீதிகளில் தினமும்போக்குவரத்து ஸ்தம்பிதங்கள் ஏற்படுகின்றன.

பொலிசாரின் தீவிரமான கண்காணிப்பினால் போக்குவரத்து விதி ஒழுங்கு விதிகளை மீறிய சாரதிகள் மீது தினமும் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதாக வீதிப் பரிசோதனை ரோந்துப் பொலிசார் தெரிவித்தனர். (க)

# மகாதேவா தாம்போதி வேலை மூன்று மாதங்களில் பூர்த்தியாகும்

(மட்டுவில்)

வடபகுதியின் முக்கி அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றான மகாதேவா தாம்போதி நிர்மான வேலைகள் இன்னும் மூன்றுமாதங்களில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்றரை மாதங்களில் இதுவரை 203 அடிதூரம் பூர்த்தியாகியுள்ளது.

பெஞ்சாலைப் பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. எஸ். இராமக்கிருஷ்ணன் தலைமையில் மகாதேவா தாம்போதி வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தொழில் நுட்ப அலுவலர்கள் திருவாளர்கள் சிவகுமாரன், நாகேஸ்வரன், சற்குணம் ஆகியோர் இவருக்கு உதவியாக சேவை செய்துவருகிறார்கள்.

தாம்போதியின் மொத்த நீளம் 3360 அடி ஆகும்.

1000 அடி தூர தாம்போதி நிர்மான வேலைகள் பூர்த்தியானதும், அதிலிருந்து பால அமைப்புவேலைகள் ஆரம்பமாகும். தாம்போதி அமைப்பு பற்றி அமெரிக்க திட்டமிடல் நிதியுதவி நிறுவன நிபுணர் குழு ஒன்று பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இங்கு விஜயம் செய்து ஆய்வுநடத்தவுள்ளது.

## சுற்று நீதிமன்ற விசாரணைகள்

(பச்சிலைப்பள்ளி)

பருவகால விடுமுறைக்காக மூடப்பட்ட பளை சுற்றுநீதிமன்றத்தின் விசாரணைகள் மீண்டும் 5-ம் திகதி ஆரம்பமாகின்றன.

### மணிவாக்கு

கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதன் வழியாய்ப்பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிறவாசல் இடுக்கமும், வழிநெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்.

— பைபிள்

# நமது நோக்கு

## மீண்டும் மின் நெருக்கடி

சென்ற வருடத்தைச் சீர்கெடுத்து வந்த மின் நெருக்கடி எதிர்பாராத வண்ணம் இவ்வாண்டுத் தொடக்கத்திலேயே தலை காட்டத் தொடங்கிவிட்டது.

ஜனாதிபதி ஜயவர்த்தன ஓர் அவசர மாநாடு கூட்டுவதானால் நிலைமை மோசமடையாது தடுக்கும் நடவடிக்கைகள் எடுப்பதே முக்கிய நோக்கமென்று கருதலாம்.

எரிசக்தி, மின் சக்தி அமைச்சு அந்தர நிலையில் செயற்படுகின்றது. மின் சாரத்தை அதிக அளவில் பாவிப்போருக்கு மேலதிக கட்டணம்; ஆடம்பர நிகழ்ச்சிகளுக்கு மின் தடை; சிக்கனத்தை உதறித்தள்ளும் பாவனையாளர்களுக்கு மின் துண்டிப்பு.

இவையெல்லாம் மின்சக்தியை பெருமளவில் பேணிவைக்கஉதவா. பருவமழை பாவனையாளர்களுக்கு திருப்தியளித்தபோதும்; மவுசக்கலை, காசல்றீ நீர்த்தேக்கங்களில் எதிர்பாராத வகையில் நீர்மட்டம் விரைவில் குறைந்துவருகிறது.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்த வாயுக் கூதங்களில் இரண்டு சடுதியில் பழுதடைந்துவிட்டன. நீராவியால் மின் உற்பத்தி செய்ய உதவும் பக்கபலங்கள் இவை; ஜெனறேற்றர்களை தேடும் பணியில் அதிகாரிகள் அவலப்படுகின்றனர்.

மக்கள் அவசியதேவைக்கு மட்டும் மின்சக்தியைப் பாவிக்கும் கண்டிப்பான ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பது கேள்விக்குறி. தேசிய பழக்க வழக்கங்களில் இத்தகைய கட்டுப்பாடு இன்னும் இடம்பெறவில்லை

இந்தப் பின்னணியில் நாம் கூறிவந்த பழைய 'புதுவழியை' மீண்டும் வற்புறுத்துகின்றோம். இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு எரிபொருள், மின் சக்தியின்தேவை பெரிய சிக்கலை ஏற்படுத்திவருகின்றது.

புதிய வழிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தால் அவை தொழிற்படுமா? பருவமழை பொய்த்தால் கடல் அலைகளின் இயக்கத்திலிருந்து மின்சக்தியைப் பிறப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விஞ்ஞான வளர்ச்சி அடைந்த நாடுகளில் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. நான்கு பக்கங்களிலும் கடலாற் சூழப்பட்ட எமது நாடு இந்த வழியைப் பயன்படுத்துவது அவசியமாகின்றது; தயங்குவதற்குத் தக்க காரணம் உண்டா?

எரிபொருளைப் பொறுத்தளவில் சூரியவெப்ப சக்தியை நாம் அறிமுகப்படுத்த விரும்புகின்றோம். சூரியனிடமிருந்து ஒளிக் கதிர்களைப் பெறுகின்றோம். கதிர்களுடன் வெப்ப சக்தியும் பூமியை வந்தடைகின்றது. சூரிய வெப்ப சக்தியை எரிபொருளின் தேவைக்கு பயன்படுத்தும் அவசியம் வந்துவிட்டது. இந்தியாவில் சூரிய அடுப்பு சூரிய உலை என்பன செவ்வனே தொழிற்படத் தொடங்கிவிட்டன.

'ஓ. பி. ஈ. சி' என்று ஆண்டாண்டுதோறும் அழுது புரளாமல், நீர்மின், சூரிய வெப்பசக்தி, உயிரியல் வாயு முதலிய புதுவழிகளில் சிந்தனையைச் செலுத்துவது நன்மை பயக்கும்.

## புத்தாண்டுப் பரிசு

வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்களின் பாதுகாப்பு பற்றி வேறு சில கோணங்களில் இருந்து கடந்தகாலத்தில் சில ஆலோசனைகள் குறிப்பிட்ட ஞாபகம் எமக்குண்டு.

இன்று இவ்விடயம் பற்றிக் கிடைத்திருக்கும் செய்தி மகிழ்ச்சிக்குரியது. அதேசமயம் செய்தி செயலில் 'மொழிபெயர்க்'கப் படவேண்டியதின் அவசியம் தெளிவு.

''நாடு திரும்புவோர் நலன் பேணும் பிரிவு'' என்று ஒரு தனியானதிணைக்களம் நிறுவப்படவுள்ளதே நாம் குறிப்பிடும் செய்தி.

தொழில் அமைச்சு இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறதாக அறிகிறோம்.

பல்லாயிரக்கணக்கான இலங்கை மக்கள் இப்போது வெளிநாடுகளில் வேலை செய்கின்றனர். அவர்களில் பலருக்கு நல்ல சம்பாத்தியம் உண்டு. காலகதியில் ஆறு வற்றுமாப்போல் இவர்கள் இங்கு திரும்பும் கட்டம் ஏற்படும். அதன் படைசிக் கந்தாயத்தைக் காத்திருந்தால் இவர்கள் நாட்டுக்கு மீண்டும் பாரமாவதுடன், இவர்களின் சேமிப்பும் தொழிலாற்றலும் அனுபவமும் காற்றோடு காற்றாய் மறைந்து விடும்.

எனவே வெளிநாட்டுச் சேவையில் இருக்கும்போதே இத் திணைக்களம் சீராக அமைக்கப்படின் ஒவ்வொருவரும் அதனுடன் தொடர்பு கொண்டு தங்கள் வரலாற்றையும் சேமிப்பு விவகாரங்களையும் தனிப்பட்ட கோவையில் சீர்படுத்துவது முதன்மையான தேவை.

நாடு திரும்பியதும் திணைக்களம் இவர்களுக்கேற்ற வேலைவாய்ப்பும், சேமிப்பு விபரங்களும் வழங்கும் திட்டம் தயார்படுத்துவதே இத் திணைக்களத்தின் முக்கிய பணி.

இங்கிருந்து வெளியேறும் மலையக மக்கள் பலரின் கதி இவர்களுக்கு நேரக்கூடாதென்பது எமது நேத்திக்கடன்? சுங்க இலாகாவிலும், தொழில் திணைக்களத்திலும் வெளிநாட்டு 'வீ ஐ பீ'க்களுக்கு நல்ல 'கிராக்கி' இருப்பது நாம் அறிந்தது. பல 'நன்கொடைகள்' அளிக்கவேண்டிய நிர்ப்பந்தம்!

ஊழல்கள், இனப்பாகுபாடுகள், அப்பாவி மக்களின் அறியாமையைச் சுரண்டி அவர்களின் கடும் உழைப்பின் ஒரு பகுதியை அபகரித்தல், இவைபோன்ற கொடுமைகளுக்கு இடமளிக்காத இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தொழில் அமைச்சர் செயற்படுத்துவாரென்று நம்புகின்றோம்.

நீரில் நீந்தும் மீன்கள் தண்ணீரைக் குடிப்பதில்லையென்பது திடமற்ற கூற்று; இருப்பினும் அத்தகைய 'மீன்களை' குறிப்பாக இத் திணைக்களத்திலிருந்து நீக்கும் வல்லமையுடைய 'திறமைசாலி மீனவர்' தொழிலமைச்சர் காப்டன் சேனவிரத்ன ஆவனசெய்வாரென்பது எமது நம்பிக்கை.

ஆ ...ாதரிசனமும் விஞ்ஞானமும்

# திருவாசகம் ஒரு

## அறிவுப்பொ...கிஷம்

இப்பொழுது விஞ்ஞானம் என்று சொன்னால் மேற்கு நாடுகளில் தோன்றி வளர்ந்த அறிவைத்தான் குறிப்பிடுகிறோம். இந்த விஞ்ஞான அறிவு (வான சாஸ்திரம் - ...sr nom... உட்பட) கடந்தசுமார்முந்நூறு ஆண்டுகளுக்குள்ளேதான் வளர்ச்சிஅடைந்துள்ளது. ஆயினும் இந்த முந்நூறு ஆண்டுகளுக்குள் அது அடைந்திருக்கும் வளர்ச்சி நம்மைப் பிரமிக்க வைக்கிறது. வான சாஸ்திரத்திரத்தைப் பொறுத்த அளவில் பூதக்கண்ணாடி அல்லது தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்த பின்புதான் வான சாஸ்திரம் வெறும் அனுமானத்தை விட்டு நிரூபிக்கக் கூடிய உறுதியான கருத்துக்கள் உருவாகி இந்த வளர்ச்சி துரித கதியை அடைந்தது.

ஆதி காலந்தொட்டே பூமியில் வாழும் மனிதன் அண்ணாந்து பார்த்து பகலிலே சூரியன் உதிப்பதையும் உச்சிக்கு வருவதையும் பின்பு மறைவதையும் இரவிலே வானவெளி காட்டும் காட்சியையும் கண்டு அதிசயங் கொண்டு சிந்தித்திருக்கிறான். சீனர்களும், இந்தியர்களும், சுமேரியர்களும். பபிலோனியர்களும், அராபி

**வ. வரதநின..**

யர்களும், எகிப்தியர்களும், கிரேக்கர்களும் பலவாறு சிந்தித்து எழுதி வைத்திருக்கிறார்கள். இவர்களில் ஒருத்தர் தான் நமது மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகருக்குச் சற்று முன்பு அதாவது கி.மு. 4ம் நூற்றாண்டில் வாழ்ந்த அரிஸ்தொட்டுள் (Aristotle) என்னும் கிரேக்க தத்துவஞானி பிரபஞ்சத்தின் தன்மையை இப்படி விளக்கியிருக்கிறார். அதாவது நாம் வாழும் பூமி ஒரு பெரிய கண்ணாடிப் பேழை போன்ற ஓட்டுக்குள் இருக்கிறதென்றும் பூமியின் உள்பகுதி கல்மயமானது. அதைச் சுற்றி நீரும் நீரைச் சுற்றி காற்றும் காற்றைச் சுற்றி நெருப்பும் இந்த நெருப்பு பூமியை மூடியிருக்கும் கண்ணாடிப் பேழையின் ஓடு வரையில் பரந்து உள்ளதென்றும் ஓட்டிலே சந்திரன் பதிக்கப்பட்டுள்ளதென்றும் சந்திரனுக்கும் பூமிக்கும் இடையில் ஒரே குழப்பமும், தீமையும் மாற்றமடையும் வஸ்துக்களான வானவில் வீழ்வெள்ளி, வால்வெள்ளி போன்றன உண்டென்றும் பேழையின் மத்தியில் பூமியானது அசையாது நிலைகொண்டு இருக்கிறது என்றும் இந்தப் பேழைக்கு அப்பாலே சுவர்க்கம் இருக்கிறதென்றும் சுவர்க்கத்தையும் பூமி இருக்கும் பேழையையும் முறையே சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி ஆகிய கிரகங்கள் இருக்கும் கண்ணாடிப் பேழைகள் பிரிக்கின்றன என்றும் இவை எல்லாவற்றையும் உள்ளடக்கி நட்சத்திரங்கள்பதித்த மாபெரும் பேழை சுற்றியிருக்கிறதென்றும் இந்தப் பெரிய பேழை இருபத்து நாலு மணித்தியாலத்துக்கு ஒரு முறை சுழலுவதால் ஏனைய பேழைகளையும் இயக்கிவிடுகிறது என்றும் தனது கருத்தைப் போதித்து வந்தார்.

அரிஸ்தொட்டுள் போதித்த இந்தக் கருத்தே மேற்கத்தைய நாடுகளில் அறிஞர்களையும் மதகுரும...களையும் ஆட்டிப்படைத்து வந்தது. இடையில்...த்து கிரேக்க வான சாஸ்திரிகள் பலர் அரிஸ்தாக்கஸ் ரெற்றஸ்தீனிஸ், டோலமி, இவர்கள் எல்லாரிலும் மிகப் பிரசித்தி பெற்றவனான ஹிப்பாக்கஸ் (Hipparchus) போன்றவர்கள் அண்டவெளியை மிக நுட்பமாக ஆராய்ந்து ...மான கருத்துக்களை வெளியிட்டார்கள். ஆனாலும் அரிஸ்தொட்டுள் கருத்தே பெரும்பாலும் ... ...ருந்தது. மேற்கு ஐரோப்பாவிலே ரோமன் கத்தோலிக்க திருச்சபை (...h ...hurch) ஒருபடி மேலுக்குப் போய் அரிஸ் தோட்டுள் கருத்துக்கு மாறாகப் போதிப்பவர்களைத் தண்டித்து வந்தது சரித்திரத்தின் மத்திய காலம் (... ...s) எனப்படும் பகுதியிலே திருச்சபையின் கருத்துக்களுக்கு மாறாக கருத்து வெளியிடுபவர்களை (Inquis... ) என்ற குழு முன் நிறுத்தி விசாரணை செய்து தண்டிப்பார்கள். உதாரணமாக கி.பி. 1600 இல் கி... டாலே புரூனோ என்னும் சித்தராகிய வானசாஸ்திரி, சூரியன் தான் மத்தியில் இருப்பது ஏனைய கிரகங்களைப் போல பூமியும் ஒரு ...கிரகம் பூமி இருபத்து நாலு மணித்தியாலத்துக்கு ஒரு முறை சுழன்று கொண்டு ஒரு வருஷத்துக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது என்று முன்பு கி. பி. 1543 இல் கொப்பேர்னிகஸ் (Co...r...i...us) என்ற வானசாஸ்திரி கண்டு பிடித்துக் கூறியதே சரி என்று வாதாடியமைக்காக இன்குவிசிஷன் முன்னிலையில் நிறுத்தப்பட்டான். இந்தக் கொள்கையை மறுக்கும்படி கேட்டும், அவன் பிடிவாதமாக இருந்தபடியால் மரக் குத்தியை நிறுத்தி அதிலே அவனைக் கட்டி சுற்றிவர விறகு அடுக்கி நெருப்பு வைத்து எரித்து சாம்பலாக்கப்பட்டான். திருச்சபை நிந்தனைக்கு (he...sy) இன்குவிசிஷன் வழங்கிய தண்டனை இது, நமது சரித்திரத்தில் கழுவேற்றுவதும் சுண்ணாம்புக் காளவாயில் இட்டதும் போல.

கொப்பேர்னிகஸ் கி. பி. 1543 இல் வெறும் கண்ணாலே ஆகாயத்தையும் பூமியின் இயக்கத்தையும் அவதானித்து கணக்குப் போட்டு எடுத்த முடிவு அவன் காலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினாலும் அறிஞர்களால் வரவேற்சப்பட்டது. ஆயினும் தூரதிருஷ்டிக் கண்ணாடி (...scope) கண்டுபிடிக்கப்பட்ட பின்புதான் உண்மை பூரணமாக நிரூபிக்கப்பட்டது.

கி. பி. 1609 இல் ஒல்லாந்தில் வாழ்ந்த ஹான்ஸ் லிப்பேர்ஷி (... Lippershey) என்னும் மூக்குக் கண்ணாடி சரிக்கட்டுபவன் தூரத்துப் பொருட்களை பெரிதாகக் காட்டும் கண்ணாடி ஒன்றை வார்த்து முதலாவது தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்தான். இந்தக் கண்டுபிடிப்பு வான சாஸ்திரத்திலே புதியதொரு சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தது. அது வரையில் வெறும் கண்ணாலே பார்த்து அனுமானம் செய்த காலம் மாறி இந்தக்கண்ணாடியின் உதவியுடன் ... அண்ட வெளி இரகசியங்களை நிதர்சனமாகப் பார்த்து ஆராயும் காலம்தொடங்கியது.

திருவாசகத்தை நாம் படிக்கும்பொழுது அல்லது பாடும்பொழுது, காலத்தோடு கற்பனை கடந்த கருவூலத்துப் பழம் பாடற் கலைமாச்செல்வர் தேடி வைத்த'' என்று குமரகுருபர சுவாமிகள் பாடியிருப்

(7ம் பக்கம் பார்க்க)

### திருவெம்பாவை சிந்தனை 3)

## எடடிமொட்டாக்கை

சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் முதன் முறை யாழ்ப்பாணத்திற்கு வந்ததும், யோகசுவாமிகளைக் காணச்சென்றார் 'எடடிமொட்டாக்கை' என்று கூறியவண்ணம் யோகசுவாமிகள் மறைமலையடிகளை வரவேற்றார். தலையைமூடி முக்காடிட்டு வாழ்ந்த மறைமலையடிகள் அதனை நீக்கிவிட்டு வணங்கி இருந்தார். ''நீங்கள் இப்பொழுது என்ன செய்கிறீர்கள்'' என்று சுவாமிகள் கேட்டார்கள். அதற்கு அடிகளார் ''திருவாசகத்திற்கு உரை எழுதுகிறேன்'' என்றார். ''திருவாசகத்தைப் பாடியவர் யாவர்?'' ''மாணிக்கவாசகர்'' ''அப்ப நீங்கள் உரையெழுதிப் போட்டீர்கள்'' என்று கூறிய சுவாமிகள் மெதுவாக எழுந்து நடந்தார். ''சுவாமி! சுவாமி!! அப்படியானால் வேறு யாவர் பாடியவர்?'' என்று கேட்ட வண்ணம் மறைமலையடிகள் பின்தொடர்ந்தார். ''சிவபெருமான் பாடியருளினார் காணும்'' என்று சுவாமிகள் கூறினார்கள்.

...க்குவப்பட்ட ஆன்மாக்கள் நாடகி பாவனையில் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் திருவருளின் செயல் என உணரப் பெற்று அம்மாடி எனத் திருவருள் வயப்பட்டு இருப்பார்கள். என்னால் ஒன்றும் இயலாது எல்லாம் உன்செயலே என்னும் உணர்வு தலைப்பட்டதும் திருவருள் அனுக்கிரக சத்தியாக முன்வந்தருளத் தொடங்குகிறது.

**க. சி. குலரத்தினம்**

முன்னர் சிற்சத்தியாய் எம் முன்னே மறைந்து நின்று தோன்றாத்துணையாய் நின்றது சிற்சத்தி. அது விடியற்காலம் வரை எமக்கு ஒளியூட்டும் விளக்குப் போல்வது. தோன்றாத்துணை தோன்றும் துணையாய் அனுக்கிரகிப்பது சூயோதயம் போன்றது.

திருவெம்பாவையில் இருபது பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதல் எட்டுப் பாடல்களும் கன்னியர் தங்கள் தோழிகளைத் துயிலெழுப்பும் பாடல்களாகவுள்ளன. ஒன்பதாவது பாடல் துயிலெழுந்த பெண்கள் தங்கள் விண்ணப்பத்தை இறைவனிடம் கூறும் பாவனையிலமைந்ததாகும். பத்தாம்பாடல் அவர்கள் இறைவனின் தன்மைகளைத் திருக்கோயிற் பெண்களிடம் கேட்டறிதலாகும்.

பதினோராம் பாடல் முத...

(7ம் பக்கம் பார்க்க)

### ஆங்கிலம் போதனாமொழியாக உள்ள

# கல்லூரிகளினால் தமிழர்கலாசாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது

## பல்கலைக்கழகபட்டமளிப்புஉரையில்ம.பொ.சி

சென்னை, ஜன.1

தமிழ்நாட்டின் கல்வித் துறையில் சகல மட்டங்களிலும் தமிழே போதனா மொழியாக இருக்கக் கூடிய விதத்தில் பல்கலைக்கழகங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ் மேல் சபைத்தலைவர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் சென்னை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய பட்டமளிப்பு உரையில் கூறினார்.

தமிழகத்தில் தமிழ் மொழியில் பல்கலைக்கழகப் பரிசளிப்பு விழா உரை நிகழ்த்தப்பட்டது. இதுவே முதல் தடவையாகும்.

தமிழகத்தில் ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கும் கன்னியர் மடங்களால் தமிழ் மக்களின் கலாச்சாரம் பாதிப்புறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே கல்வியில் சகல மட்டங்களில் தமிழே போதனாமொழியாக இருக்க வேண்டும். என்றும் திரு. ம. பொ. சி. கூறினார். (இ)

## மகாதேவா தாம்போதிவேலை

(மாவிட்டபுரம்)

மகாதேவா பால அபிவிருத்தி நிதிக்காக தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் 1000 ரூபாவை வழங்க இருக்கிறது.

சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்க மண்டபத்தில் நடைபெற்ற போதே இம் முடிவு எடுக்கப்பட்டது. யாழ் பொது சன நூலக புனரமைப்பு நிதிக்காகவும் 5000 ரூபாவை வழங்க சங்கம் தீர்மானித்துள்ளது.

## இந்தியப் பொறியியலாளர்கள்

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்திவேலைகளில் அரசாங்கம் 30 இந்திய பொறியியலாளர்களை ஈடுபடுத்தவுள்ளது. (வெ)

## ஹரிஜனர்கள் படுகொலை

புதுடில்லி, ஜன. 1

வட இந்தியாவில் பல ஹரிஜனர்கள் படுகொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. உத்தரபிரதேசத்திலுள்ள சதுப்பு என்ற கிராமத்தில் பத்து ஹரிஜனர்கள் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இவர்களில் 5 பேர் பெண்களாவர்.

மற்றொரு கிராமத்தில் 24 ஹரிஜனர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது. (வெ)

## போலந்தில் அமைதியின்மை ஆர்ப்பாட்டம் தொடர்கிறது

வார்சோ, ஜன. 1

புத்தாண்டு தினத்தையொட்டி போலந்தில் கடந்த இரவு ஊரடங்குச்சட்டம் தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தது. எனினும் பல தொழிற்சாலைகள், சுரங்கங்களில் தொழிலாளர்களிடையே அமைதியின்மை காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

இதே சமயம் இராணுவச் சட்டத்தை எதிர்த்து பல ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து இடம் பெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடத்தில் அடிப்படை உணவுப் பொருட்களின் விலை மூன்றுமடங்கு அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளையில் போலந்து மக்கள் ஒற்றுமையுடன் இருந்து அமைதிகாக்க வேண்டும் என்று போலந்து தலைவர் திரு. ஜவ்லேன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## கானாவின் இன்றைய நிலையை மாற்ற சமூக பொருளாதாரப் புரட்சி அவசியம்

### புதிய இராணுவ ஆட்சித் தலைவர் கருத்து

ஆக்ரா, ஜன 1

கானாவில் திடீர் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவ பீடம் அங்கு நிலவும் ஊழல், முறைகேடு ஆகியவற்றைக் களைந்தெறிய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளது.

கானாவின் இப்போதைய வடிவத்தை மாற்றி அமைக்க சமூக பொருளாதார புரட்சி அவசியம் என்றும் இராணுவ பீடம் அறிவித்துள்ளது.

இராணுவம் ஆட்சியைப் பொறுப்பேற்றதும்கடந்தஆட்சியினால் சிறைவைக்கப்பட்ட இராணுவ வீரர்கள் விடுதலை செய்யப்பட்டதுடன் கட்டாய ஓய்வு பெற்ற இராணுவ உயர் அதிகாரிகள் இருவரையும் மீண்டும் உடன் பதவியில் அமர்த்துமாறும் இராணுவ பீடம் உத்தரவிட்டது.

இராணுவ ஆட்சித்தலைவர் பிளைட் லெப்டினன்ட் ஜெறி ரோலிங்ஸ் மேற்கண்ட உத்தரவுகளை விடுத்துள்ளார்.

**எல்லைகள் மூடப்பட்டன**

இதே வேளையில் கானாவில் ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டுள்ளதுடன் கானாவின் எல்லைகள் யாவும் மூடப்பட்டுவிட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)




100 மி. லீட்டர் போத்தல் சில்லறை விலை ரூபா 31-50

200 மி. லீட்டர் போத்தல் சில்லறை விலை ரூபா 57-00

450 மி. லீட்டர் போத்தல் சில்லறை விலை ரூபா 119 50

இ போ ச ஊழியர்

## வேலை நீக்கத்தை ஆட்சேபித்து தாக்கல் செய்த மனு தள்ளுபடி!

(சாவகச்சேரி)

இலங்கை போக்குவரத்து சபையிலிருந்து தம்மை வேலை நீக்கியது முறையற்றதென்று தாக்கல் செய்த மனு சாவகச்சேரியிலுள்ள வடபிராந்திய தொழில் நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். என். குருசாமி விசாரணை செய்தபின் வேலை நீக்கம் செய்தது நீதியானதென தீர்ப்பளித்து மனுவை தள்ளுபடி செய்தார்.

கிளிநொச்சி டிப்போவில் கடமையாற்றிய எஸ். தவராசா தம்மை நீதியற்ற முறையில் இலங்கை போக்குவரத்து சபை வேலை நீக்கம் செய்ததாக மனுவில் தெரிவித்திருந்தார்.

மனுதார் சார்பில் சட்டத்தரணி எஸ். தியாகராசாவும் எதிர் மனுதார் சார்பில் சட்டத்தரணி விக்னேஸ்வரனும் ஆஜரானார்கள்.

கிளிநொச்சி டிப்போசாலை அத்தியட்சகர் பீ. யூ. மகாலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது; ''79 ஜூலை 23ம் தேதி நான் எனது காரியாலயத்துள் இருக்கின்ற வேளையில் தவராசா என்பவர் மதுபோதையில் உள்ளே வந்தார். வரும்போது இவர் எனது பெயரைச் சொல்லி கூப்பிட்டுக்கொண்டு வந்தார். அப்படி அழைப்பதுமரபில்லை. வந்தவர் ஏன் முற்பணம் தர முடியாதெனக் கேட்டுக் கொண்டு என்னருகே நெருங்கினார். நான் பொலிஸிற்கு அறிவிக்க முற்படும்போது ரெலிபோனை என் கையிலிருந்து பறித்தார். என்னை அடிக்கவும் முற்பட்டார். பொன்னையா, தியாகராசா ஆகியோர் இவரைக் கட்டிப் பிடித்திழுத்துச் செல்லாவிட்டால் நான் தாக்கப்பட்டிருப்பேன்.

சாட்சியங்களைப் பதிவு செய்தபின் நீதிபதி தமது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார். இங்கே கொடுக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் பிரகாரம் 4ம் குற்றச்சாட்டு எந்த வித ஐயப்பாடுகளுக்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த [illegible]வது குற்றச்சாட்டு ஒரு கட்டுப்பாடின்மை, ஒழுங்கின்மை வன்முறையான செயல் என்பதால் இந்தக் குற்றச்சாட்டுப் பாரதூரமானது எனக்கருதப்படுகிறது. எனவே இந்த விண்ணப்பத்திலே கூறப்பட்ட தொழிலாளிக்குக் கொடுக்கப்பட்ட வேலை நீக்கம் நியாயமானது எனக்கருதி விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்கிறேன். (க)

## லிபியா - சவூதி ராஜதந்திர உறவு

ரிப்போலி, ஜன. 1

லிபியாவும், சவுதி அரேபியாவும் ஒருவருடகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ராஜதந்திரதொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளத்தீர்மானித்துள்ளன.

ஈரான்—ஈராக் யுத்தத்தினால் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளும் ராஜதந்திரத் தொடர்புகளைத் துண்டித்திருந்தது தெரிந்ததே. (வெ)

## தீக்கிரை

சென்னை, ஜன. 1

ராயப்பேட்டையில் இடம் பெற்ற தீவிபத்தொன்றில் 1[illegible] டுகள் தீக்கிரையானதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

## சுவிசேஷ கல்விக்குழு

(அரியாலை)

சுவிசேஷ கல்வி பரப்பும் லோகோஸ் சப்ப குழுவினர் யாழ்ப்பாணத்தில் பரந்த அளவில் நற்செய்திப் பணியாற்ற 1982ம் ஆண்டு மார்ச் மாதம் முற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள்.


வெலிங்டன் மானிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.30
காமினி - ஸ்ரீ
நீலக்கடலின் ஓரத்திலே

4 வது
ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்—ஸ்ரீதேவி
மகள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10.30, 2.15, 4.45, 7.15, 9.30
The Swarm

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
அன்னப்பறவை

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி10—30,2—30,6—30,9—30
சிவாஜி—கே. ஆர். விஜயா நடித்த
நான் வாழவைப்பேன்

ஸ்ரீதர் தினசரி: 10:30, 2:00, 4:30, 7:00, 9:30
யாழ். நகர்
கொழும்பில் 75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிப்படம்
10
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

வின்சர்
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
சுதாகர் ... ராதிகா
நிறம் மாறுத பூக்கள்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி]

சாந்தி (யாழ்.நகர்) தினசரி 10—45, 2—30, 6—15, 9—45
ஜனத்திரல் மத்தியில் 100 நாட்களுக்கு மேல் பரபரப்பூட்டிக் காட்சியளிக்கிறது
கமல்—ஸ்ரீதேவி நடித்த வண்ணப்படம்
குரு

ராணி (யாழ்.நகர்) தினசரி 10—30, 2—15,4—15, 7—15, 9—45
இரத்தத்தை உறையவைக்கும் பயங்கர சம்பவங்கள் மர்மங்கள் நிறைந்த படம்
Carrie (ஆங்கிலம்)

4—1—82 வரை
ரீகல் 4—வது வாரம்!
(யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆரின் வெற்றிப்படைப்பு
ரகசியப் பொலிஸ் 115
யாழ். நகரில் இதுவே கடைசித்தடவையாகக் காண்பிக்கப்படும்.
5th and 6th
Michael Douglas in COMA

ராஜா சரஸ்வதி
(யாழ். நகர்) [திருமலை]
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீதேவி—சக்கரவர்த்தி—லட்சுமிஸ்ரீ
தர்ம யுத்தம் (ஈஸ்ட்மன் கலர்)


# இன்றைய பலன்

மார்கழி மாதம் 18 ம் திகதி
சனிக்கிழமை
(2—1—82)

மேடம்: வார்த்தையாலம் செய்வதன்மூலம் மற்றவர்களை வசீகரிப்பீர்கள் எழுத்தாளர்களுக்கு சிறப்பானதினம். இருக்குமிடத்தில் ஆதரவு பெருகும் சிலருக்கு பொதுசன தலைமையும் கிடைக்கலாம்.

இடபம்: பிரிவின் தாக்குதல் வேதனையைத் தரும். தொழில்துறையிலும் பின் தங்கநேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு மனத்திடம் விரும்பத்தக்கது.

மிதுனம்: இதயத்தைத் தொடும் சம்பவதினங்கள் இடம்பெறும் சிலருக்கு புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் ஏற்படலாம். இயந்திரத்துடன் பழகுபவர்களுக்கு புகழுரை கிடைக்கும், திருப்தியான தினம்.

கடகம்: தெளிந்த மனம் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும். அமைதியுடன் ஆனந்த வாழ்வும் உண்டு. இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும் சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும்.

சிங்கம்: கன்னல் போல் வாழ்வு கருத்தினில் காதல் மோசம், மின்னல்போல் மறையும் இன்றே வாட்டிரும் பிணியும் தானே வீணன வார்த்தைகளால் மனம் புண்படும் தொழில் துறைகளில் முட்டுக்கட்டை தோன்றக்கூடும்.

கன்னி: குடும்பம் இன்று கலைக்கோயிலாக மாறும். இசைத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படும் பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு. நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும்.

துலாம்: எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும்: நண்பர்கள்மூலம் நஷ்ரமடைவதற்கு இடமுண்டு. கூட்டு வியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்றாக சிந்தித்த பின்பு செயலாற்றுக.

விருட்சிகம்: பூமியால் லாபம் உண்டு. புத்திரர் புகழும் சேரும். பொதுசன தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும் உடல்நலம் பாதிக்கப்படுமாகையால் வாய்வுப் பதார்த்தத்தை தவிர்த்துக் கொள்ளவும் பிதாவழி சுகமும் உண்டு.

தனு: செய் தொழிலில் சிறப்பான இடம் கிடைக்கும். வெளியூர் அன்பர்கள் உங்களை வரவேற்பதற்கு காத்திருப்பர் முயற்சிகளுக்கு தெய்வத்தின் துணை உண்டு. நிதியில் திருப்தி உண்டு.

மகரம்: வாழ்க்கையில் புதிய உற்சாகம் பிறக்கும் கருத்து வேற்றுமைகள் மறையும் பல வழிகளிலும் பொருள் வரவிற்கு இடமுண்டு. சிலர் வாழ்வில் நீண்டநாள் பிணி இன்று நிவர்த்தியாகலாம்.

கும்பம்: மனதில் விரக்தி நிலை தென்படும். உடல்நலமும் பாதிக்கப்படலாம். கால் நடைகளினால் நஷ்டம் ஏற்படும் பூமிப் பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடலாம்.

மீனம்: அரசியல் வாதிகளுக்கு இன்று அடிசறுக்கலாம் நான் என்ற அகம்பாவத்தை அடக்கிக்கொள்ளவும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொள்ளவும் அமைதி நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## வசாவிளான் வெற்றி

(சுண்டிக்குளி)

குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வசாவிளான் மின் மீன் விளையாட்டுக்கழகத்துக்கும் ஏழாலை விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வசாவிளான் மின் மீன் கழகம் 10—1 கோல்களால் ஏழாலை விளையாட்டுக்கழகத்தை வெற்றியீட்டியது. இப்போட்டி மேற்படி மன்றத்தின் மைதானத்தில் நடைபெற்றது. (க)

## ஆச்சிரமத்துக்கு நிதி அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சேவாச்சிரம அபிவிருத்திக்கென வட பிரதேச ஐக்கிய தேசியக்கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு. கே. கணேசலிங்கம் 1000 ரூபா நிதி வழங்கியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுவாமி சித்ரூபானந்தாவிடம் இப்பணத்தை அவர் கையளித்தார். (அ)

# 'மாடி வீடுகளைக் கட்டி நிலத்தில் பயிரிடுவோர்'

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திராட்சை செய்கையாளர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் முதலியார் வை மகேசன் தலைமையில் நடைபெற்றது.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா பேசுகையில் மாடி வீடுகளை கட்டி நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறும் திராட்சைப் பயிருக்குத் தேவையான இயற்கை உரத்திற்காக மாட்டுப் பண்ணைகளை ஊக்குவிக்குமாறு கூறினார். விவசாய நிபுணர் திரு. வி. சின்னையா திராட்சை செய்கைச் பற்றி உரையாற்றினார்.

திரு. வை. சி. சி. கு. பிரேமானந்தா, வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கைகளை ஏற்றுக்கொள்வதாக முன்மொழிய, திரு. ஈ. வி. இராமநாதன் வழிமொழியச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. (க)

# "சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு இயக்கம்"

## சாவகச்சேரியில் அங்குரார்ப்பணம்

(மட்டுவில்)

சாவகச்சேரியில் சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு இயக்கம் என்ற பெயரில் புதிய இயக்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்க மண்டபத்தில் இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர் திரு. எஸ். தர்மலிங்கம் தலைமையில் அங்குரார்ப்பனம் செய்யப்பட்டது திரு. தர்மலிங்கம் தனது தலைமை உரையில் இயக்கத்தின் நோக்கங்களை விளக்கினர்.

அவர் தமது உரையில் கூறியதாவது:

இது சிறுபான்மைத் தமிழர் சமூகம் என்று அழைக்கப்படும் பலர்களின் சமூக பொருளாதார, கல்வி சீர்திருத்த தொழில் வாய்ப்பு மனிதாபிமான உரிமைகள் பாதுகாப்புப் போன்ற இன்னோரன்ன அம்சங்களின் அபிவிருத்திக்காகவும் அவற்றின் உயர்வுக்காகவும் இந்த இயக்கம் தனித்து சுதந்திரமாக இயங்கும்,

**சாதி ஒழிப்பு**

இன்று எங்கு பார்த்தாலும் சாதி ஒழிப்பைப் பற்றியே பேசுகிறார்கள். அது ஒழிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். சாதி என்றால் என்ன அது எங்கே இருக்கிறது. என்று கேட்கிறார்கள். ஏதோ மூலை முடுக்குகளில் எங்கோ ஒன்று அப்படி இப்படி இருந்தாலும் காலப் போக்கில் அது சரியாய்ப் போகும் என்கிறார்கள். இவை அனைத்தும் அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்வதைக் குறிக்கிறது.

**சீவல் தொழில்**

மரம் ஏறல் சீவல் தொழில் ஒரு கலை. இதை யாரும் எளிதில் பழகவோ செய்யவோ முடியாது. இப்படியான ஒரு கலைஞர் சமுதாயத்தின் நிலை மிகப் பின்தங்கியதாக உள்ளது. இது உடனடியாகக் கவனிக்கப்பட்டு அச்சமுதாயத்தின் இளைய சமுகத்தின் கல்வி சமுக சீர்திருத்த வசதிகள் கவனிக்கப்பட வேண்டும் அதற்கு இவ்வியக்கம் உதவுதல் வேண்டும்.

மரம் ஏறி சீவல் தொழில் செய்பவர் இழிசாதி என்று கூறினால் அவர்களுக்கு ஆலயங்களுக்குள் செல்ல ஏனைய மனிதாபிமான உரிமைகள் மறுக்கப்பட்டால் அவர்கள் சீவிய கள்ளை குடிப்பவர்கள் மட்டும் உயர் சாதியா?

அரசாங்கம் அமைக்கும் வீடுகளில் இவர்களுக்கும் வீடுகள் வேண்டும் சுயவீடமைப்புத் திட்டத்தில் இவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்பட வேண்டும். இவர்களின் குடியிருப்பு வசதிகளுக்கு நமது சமூகம் சிரமதான மூலம் உதவ வேண்டும்.

இந்த இயக்கம் ஒரு அரசியல் சார்பற்றது. கட்சிச் சார்பற்றது எந்த ஒரு சமுகத்திற்கும் விரோதமானதல்ல ஆசிரியர் திரு. பரராஜா திரு. கே. நடராஜா, திரு. கே. சுப்பையா உட்பட பலர் உரை நிகழ்த்தினர்.

இதன் தலைவராக திரு. எஸ். தர்மலிங்கம் செயலாளராக திரு. ச. பரராஜா, பொருளாளராக திரு. த. சின்னத்துரை ஆசிரியர் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (கி)

## இளைஞரைத்தேடி பொலிசார் அலைவரிப்பு

(பண்டத்தரிப்பு)

வடபகுதியில் அண்மையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் வடலியடைப்பைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் இராணுவ — பொலிசாரினால் தேடப்பட்டுவருகின்றார்.

வவனியாபிரதேசத்திலுள்ள பண்ணை ஒன்றில் வேலைபார்த்துவந்ததாக கூறப்படும் இந்த இளைஞர் வடலியடைப்பைச்சேர்ந்தவர் என்றும் இவரை சில அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக அழைத்து விசாரணை நடாத்த வென்று இராணுவ பொலிசார் வவுனியா பண்ணையில் தேடிய போது அவர் அங்கு காணப்படவில்லைஎன்றும் பின்னர் அவரது பெற்றோரின் வீட்டிற்கு அடிக்கடி இராணுவப் பொலிசார் வந்து தடுதல் நடாத்தி வருவதாகவும், இதனால் வீட்டிலுள்ளோர் பெரும் உபத்திரவத்திற்குள்ளாவதாகவும் இதுபற்றி கூறப்படுகிறது.

## நட்புறவு நிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நவில்ட் செவிடர் பழைய மாணவர் சங்க நட்புறவு நிலையத் திறப்புவிழா யாழ். கில்னர் மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)

## வீதி சீர்கேடு

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்கஅதிபர்அலுவலகத்திற்கு முன்பாக உள்ள சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு வீதி குண்டும் குழியுமாக போக்குவரத்திற்கு சீர் கெட்ட நிலையில் உள்ளது. நீண்ட காலமாக திருத்தப்படாது இருக்கும் இவ் வீதியை விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# வரி விளம்பரம்

## பயிற்சி

எலெக்றிக்கல் பயிற்சி, மோட்டார் மெக்கானிக்பயிற்சி 06. 01. 82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1856

## விற்பனைக்கு

சுண்டிக்குளி பாடசாலைக்கு அண்மையாக புங்கங்குளம் வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் விற்கப்படும். ‘‘அம்பிகை வாசம்’’, 43, செட்டித்தெரு, யாழ்ப்பாணம். (1872)

சாவகச்சேரி நுணுவில் சந்தி பிரதான வீதியில் 6 பரப்புக் காணி (வீடுகட்ட உகந்தது) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி ம. சத்திய பூரணம், 50/3, ‘‘உமாபதி’’ பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 1878

நல்ல இன செவ்விளநீர்க் கன்றுகள் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற் தொழிலகம், யாழ்ப்பாணம். 1868

## தேவை

அனுபவமும் திறமையும் வாய்ந்த ரேடியோ ரெக்னீசியன் தேவை. திறமையின் அடிப்படையில் தகுந்த சம்பளம் வழங்கப்படும். இருப்பிட வசதி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். நேரிலோ கடித மூலமோ உடன் தொடர்பு கொள்க. எ்லெக்ரோ வொய்ஸ், 85, கண்டிரோட், கிளிநொச்சி. (1874)

## வகுப்பு

விஞ்ஞான முறைப்படி உடை தயாரித்தல் (Scientific Cutting and Dress Making) மெஷின் பூவேலை (Machine Embroidery) சிகை அலங்காரம் (Hair Style) சமையற்கலை Cookery ஆகிய வகுப்புக்கள் மாஜி சிங்கர் கம்பனி, தையல் ஆசிரியையால் கீழ்வரும் விலாசத்தில் நடாத்தப்படும். ANITA SCHOOL, திருமதி. பவளம் சிவசுப்பிரமணியம், 50, அரசடி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (1866)

## சேவை

யாழ்ப்பாணம், திருநெல்வேலி நியூவேல் முருகா கற்பூரத் தொழிலகத்தின் பேராதரவில் 2—1—82 ஈழநாடு ஏட்டில் வெளிவரவிருந்த கண்ணதாசன் பற்றிய அஞ்சலி 4—1—82 நிச்சயம் வெளிவருமென்று தாழ்மையுடன் அறிவிக்கிறேன். அன்பன் உ. இ. தமிழ்ச்செல்வன், இராசேசுவரி மரத்தொழிலகம், 383, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (1879)

குருவிச்செல்லன் கொலைவழக்கு:

# ‘‘செல்லன் படுத்திருந்த இடத்தில் இரத்தம் குளமாயிருந்தது’’

## பொலிஸ் அதிகாரி சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

‘இக்கொலைச்சம்பவ எதிரியைத் தேடி அவரது வீட்டிற்குப்போனபோது எதிரியும், குடும்பத்தினரும் தலைமறைவாகிவிட்டனர். கொலையுண்டவர் படுத்திருந்த இடத்திலும் விழுந்துகிடந்த இடத்திலும் இரத்தம் குளமாக நின்றிருந்தது.

இவ்வாறு அல்வாய் சின்னன் செல்லன் (குருவிச்செல்லன்) கொலை வழக்கில் சாட்சியமளித்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் குறிப்பிட்டார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த சின்னன் செல்லன் என்பவரை வெட்டிக் கொலைசெய்தார் என்க் குற்றஞ்சாட்டி அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா என்பவருக்கு எதிராகப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இக்கொலைவழக்கு விசாரணை பருத்திதுறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணி எஸ். சிவகுருநாதனும், எதிரிசார்பில் சட்டத்தரணிகளான என். கிருஸ்ணராசா, செல்வி விஜயராணி மகாதேவா ஆகியோரும் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சொன்னதாவது: சம்பவ தினமான 10—10—81 அன்று பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியிடமி சின்னன் செல்லன் என்பவர் வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இறந்துள்ளார் எனவும், அதுசம்பந்தமாகவிசாரணைகள் மேற்கொள்ளுமாறும் எனக்குத் தகவல் கிடைத்தது.

‘‘நான் வைத்தியசாலைக்கு காலை 9—20 மணி போல் பொலிஸ் சார்ஜண்ட் வடிவேலுவுடனும், மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும் விசாரணைக்காக மந்திகை வைத்தியசாலைப் பிரேத அறைக்குச்சென்றேன். அங்கு சின்னன் செல்லனின் பிரேதம் இருந்தது. இறந்த செல்லன் முன்னரும் பலதடவைகள் விசாரணைக்காக என்முன் வந்திருக்கின்றபடியால் அந்தச்சடலம் சின்னன் செல்லனுடைய தென என்னால்அடையாளம் கண்டுகொள்ளமுடிந்தது.

‘‘இம்மரணச் சம்பவம் தொடர்பான சின்னன் இராசையா, சின்னன் தெய்வானை ஆகியோர் சாட்சியமளிக்கமுன் வந்தனர்.

‘‘வைத்தியசாலைக் கந்தோருக்குச் சென்று இறந்தவராகிய சின்னன் செல்லனுக்குக் கொடுக்கப்பட்ட படுக்கை அனுமதிச்சீட்டிலக்கத்தைப் பார்வையிட்டேன். அப்படுக்கை அனுமதிச்சீட்டைப் பார்த்ததில் இருந்து இறந்தவரின் உடலில் என்ன காயங்கள் இருந்தன என்றும், இறந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபொழுது என்ன கூறினுரென்றும், அவரைப் பரிசோதனை செய்த டாக்டர் திருமதி கலைவாணி உக்கிர பெருவழுதிப்பிள்ளை என்பதையும் அறிந்துகொண்டேன்.

‘‘இறந்தவர் சம்பவம் நடந்தபோது அணிந்திருந்த சாரத்தையும் தெய்வானை எனக்குக் காட்டினுர். சின்னன் தெய்வானையினதும் ஏனையோரினதும் சாட்சியங்களைப் பதிவுசெய்யுமாறு சார்ஜண்ட் வடிவேலுவைப் பணித்தேன்’’. (அ)

## பத்திரிகையாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா இம்மாதம் 4ம் திகதி பிற்பகல் பத்திரிகையாளர்மகாநாடொன்றை நடாத்தவுள்ளார்.

யாழ் செயலகத்தில் அபிவிருத்திசபைத்தலைவர் பணியகத்தில் இம் மகாநாடு நடைபெறும். (மா)

## இளைஞருக்கு பாராட்டு

(கோண்டாவில்)

கொக்குவில் மத்தி இளைஞர்களின் முயற்சியால் சுமார் ஐம்பதினுயிரம் ரூபா பெறுமதியான வாசிகசாலையொன்று சிரமதான அடிப்படையில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களிடம் இருந்து பெற்ற உதவிப் பணம் 12,000 ரூபாவுடன் இவ் வாசிகசாலையை கட்டி முடித்துள்ளார்கள்.

இளைஞர்களின் இம்முயற்சியை அப்பகுதிப் பெரியோர்கள் பாராட்டியுள்ளனர். (க)

## எட்டி...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இருபதாம் பாடல்களுள் முதல் எட்டுப் பாடல்களும் நீராடும் பாடல்களாகும். அம்மையப்பர் வடிவில் அமைந்த திருக்குளத்தில் அவர்கள் தோய்கின்றுர்கள். திருவருளில் மூழ்கின்றுர்கள். பத்தொன்பதாம் பாடல் இறைவனிடம் அவர்கள் தங்கள் வேண்டுகோளை விண்ணப்பிப்பதாகவுள்ளது. இருபதாம் பாடலில் அவர்கள் இறைவனை வாழ்த்துகின்றுர்கள்.

‘‘மலவிருளுற் றுறங்காமல்
மன்னுபரி பாகர் அருள்
செலமுழுக வருகவெனச்
செப்பல் திருவெம்பாவை’’

## 85 வயது மூதாட்டி கிணற்றுக்குப் பலி

(சுண்டிக்குளி)

மங்கிய இருளில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற வயோதிப மாது தவறிக் கிணற்றில் விழுந்து மரணமானுர்.

இச்சம்பவம் யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியில் நடைபெற்றது. இறந்தவரான கிருஷ்ணசாமி செல்லம்மா (வயது 85) வின் மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் நடத்தினுர். இறந்தவருக்குக் கண்பார்வை குறைவென்றும் அதனுலேயே அவர் கிணற்றில் தவறி விழுந்திருக்கலாமென்றும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது விபத்து மரணமென மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினுர். (அ)

காங்கேசன் துறை

## புதிய உதவிப் பொலிஸ் அதிபர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராக திரு. காமினி பெரேரா ஜனவரி முதல் பொறுப்பேற்கிறுர்.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அதிபராகவிருந்த திரு. எஸ். ஜி. சேனநாயக்கா கொழும்புக்கு இடமாற்றம் பெற்றதையடுத்து புதிய நியமனம் நடைபெறுகிறது.

திரு. சேனநாயக்கா இடமாற்றம் பெற்றுச்செல்வதனையொட்டி காங்கேசன் துறை பொலிஸ் நிலையத்தில் பிரிவுபசார வைபம் ஒன்று நடைபெற்றது. அத்துடன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச்செல்லும் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். ஜி. பீரிஸ், கான்ஸ்டபிள் கன்னங்கரா ஆகியோருக்கும் பிரிவுபசார வைபவம் நடத்தப்பட்டது.

## இந்திரா புத்தாண்டு செய்தி

புதுடில்லி, ஜன. 1

1982ம் ஆண்டு உற்பத்திப் பெருக்க ஆண்டாக மிளிர வேண்டும்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி வெளியிட்டுள்ள புத்தாண்டு செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ)

## இந்திரா எல்லைக்காந்தி சந்திப்பு

புதுடில்லி, ஜன. 1

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி, எல்லைக் காந்தி கான் அப்துல் கபார் கானைச் சந்தித்து புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், அவரை காபூலுக்கு வழி அனுப்பி வைத்தார். (இ)

## மூடப்பட்டது

சென்னை, ஜன. 1

தமிழ் நாட்டில் 117 ஆண்டுகளாக வெளிவந்த ‘மெற்ருஸ் மெயில், ஆங்கில நாளேடு இன்றுடன் நிறுத்தப்பட்டது.

கடந்த, 10 ஆண்டுகளாக நஷ்டத்தில் இயங்கி வந்தமையினுலே இப்பத்திரிகை வெளியீடு நிறுத்தப்படுவதாக இதன் வெளியீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

## மரநட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கிழக்கு அரியாலை மணிப்புரி கலைமகள் படிப்பகத்தில் இம்மாதம் 10 ம் திகதி காலை மரம் நாட்டுவிழா நடைபெறவிருக்கிறது. யாழ். நகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கற்பக வேந்தர் க. கனகராசா மரக்கன்றுகளை நாட்டிவைப்பார்.

மாநகர சபைஉறுப்பினர்கள் ஆணையாளர் கோவை மகேசன், திரு. ம. க. அந்தனிசில், கவிஞர் கந்தப்பன் ஆகியோர் உரையாற்றுவர் இவ்விழாவில் பலவிதமரக் கன்றுகளும் விதைகளும் அன்பளிப்பாக வழங்கப்படும்.(அ)

## திருவாசகம்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பதுபோல மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்திலேயே அள்ளிக் குவித்து வைத்திருக்கும் அறிவுப் பொக்கிஷத்தை நாம் சற்றுத் தாமதித்து நின்று திறந்து பார்த்துச் சிந்திப்பதில்லை. அதேபோல நமது அன்றாட வாழ்க்கையிலே இரவிலே அண்ணுந்து பார்த்து நித்தம் காணும் காட்சியை அவை என்ன என்று சிந்திப்பதில்லை. ஏதோ வெள்ளி பூத்திருக்கிறது என்று சொல்லித் தள்ளி விடுகிறோம். மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு அது உகந்ததல்ல. மேலெழுந்தவாரியாகவாவது அவற்றைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

முற்காலத்து இந்திய வான சாஸ்திரிகள், இவர்கள் அனேகமாக கொபேர்னிகள் போலசோதிடர்கள், வான வட்டத்தை பன்னிரண்டு சமபாகங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் இராசி என்று அழைத்தார்கள். ஒவ்வொரு இராசிக்குள்ளும் தோன்றும் வெள்ளிகளின் கூட்டம் அவர்களின் மனதிலே ஒரு உருவத்தை நினைவுபடுத்தியது. அந்த உருவத்தின் பெயரை அந்த இராசிஎன்னும் பிரிவுக்கு கொடுத்தார்கள். உதாரணமாக இரண்டு வெள்ளிகள் சேர்ந்து ஒரு ஆட்டுக்கடாவை நினைவுபடுத்தியபடியால் அந்தப் பிரிவுக்கு மேடம் என்று பெயரிட்டார்கள். அதற்கு அடுத்த வெள்ளிக்கூட்டம் ஒரு எருத்து மாட்டைப்போல இருந்தபடியால் அதற்கு இடபம் என்றுர்கள். மூன்று வெள்ளிகளிலே சற்றுக் கீழே இருக்கும் இரண்டு ஒரு தராசின் சலாகை போலவும், மூன்ருவது வெள்ளி தூக்கிப் பிடிக்கும் முடிச்சுப் போலவும் தோன்றியபடியால் அந்தப் பிரிவைத் துலாம் என்றுர்கள். ஒன்பது வெள்ளிகள் சேர்ந்து சிங்கத்தின் தோற்றத்தைக் கொடுத்தபடியால் அந்தப் பிரிவு சிங்க இராசி எனப்பட்டது. இப்படியாக மேடம், இடபம், மிதுனம் என்னும் பன்னிரண்டு இராசிகளும் அழைக்கப்பட்டன. இந்த இந்திய முறை அராபிய பயணிகளால்அரேபியாவுக்குக்கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கிரேக்க நாட்டுக்கும் சென்று மேற்கு நாடுகளில் பரப்பப்பட்டது. எனவே இராசி என்பது 30 பாகை கொண்ட வான வட்டத்தின் பிரிவு, அதில் தோன்றும் பிரதான வெள்ளிக்கூட்டம் தரும் தோற்றத்தால் பெயரிட்டு அழைக்கப்படுவது. (தொடரும்)


# The Ladies' Academy

இல. 4, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
ஜனவரி 3—ந் திகதி புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

- ★ விஞ்ஞான முறையில் உடைகள் வெட்டுதலும், உடை அமைத்தலும்.
- ★ கேக் தயாரித்தல், கேக் ஐசிங் செய்தல்.
- ★ Hair Styles, Perming, Setting, Trimming and Beauty Treatment

மேற்கூறிய வகுப்புக்களில் சேர விரும்வோர் ஞாயிற்றுக்கிழமை, புதன்கிழமைகளில் 10—3 மணிக்குமிடையில் நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்.

(மாணவிகளின் வசதிக்கேற்ப குறுகியகால வகுப்பு ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்) (1875)



# தையல் வேலை பெண்களுக்கு வெற்றிடம்

சிறுவர் உடைகள் தயாரிக்கும் நிறுவனமொன்றிற்கு (CHILDREN GARMENTS)
தையல் வேலைகளில் நன்கு அனுபவமுள்ள பெண்கள் தேவைப்படுகின்றனர்.
அனுபவத்திற்கான அத்தாட்சிகளுடன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 101, தபாற்பெட்டி இல. 49,
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

# சீமெந்து விநியோக மோசடி: உதவி அரசு அதிபர்கள் நடவடிக்கை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் பாவனையாளர்களுக்கான சீமெந்து விநியோகத்தில் இடம்பெற்ற மோசடிகளைத் தொடர்ந்து இவ்விநியோகம் உதவி அரசாங்க அதிபர்களின் நேரடி கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

முன்னர் மேற்படி தொழிற்சாலையில் பாவனையாளர்கள் சீமெந்தைப் பெறவேண்டுமானால் விண்ணப்பத்தைக் கிராம சேவகரிடம் சமர்ப்பித்து அவர் அதனை சிபார்சு செய்து, பின்னர் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சையும் பெற்று தொழிற்சாலை விநியோகப் பிரிவில் விண்ணப்பத்தைச்சமர்ப்பித்து சீமெந்தைப் பெற முடிந்தது. ஆனால் இப்போது உதவி அரசாங்க அதிபர்களிடமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பித்தால் உதவி அரசாங்க அதிபர் ஓர் பத்திரத்தை வழங்குவார். அதிலே கேட்கப்பட்டுள்ள பல கேள்விகளுக்கும் விண்ணப்பதாரர் சரியான பதிலை அளித்தாலே விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும். பதில் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களை உதவி அரசாங்க அதிபர் கிராமசேவையாளர்களுக்கு அனுப்பி அவ்விபரங்கள் சரியானவையா? என ஆராயுமாறு பணிக்கப்படுவார்கள். தேவையேற்படின் உதவிஅராங்க அதிபர் விண்ணப்பதாரரின்விபரங்களை நேரடியாகவும் கண்காணிப்பார்.

விண்ணப்பத்தின் விபரங்கள் சரியென கிராம சேவகரும் உறுதிப்படுத்திய பின்னரே சீமெந்து பெறுவதற்கு உதவி அரசாங்கஅதிபர் சிபார்சு செய்வார்.

வலி.வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இவ்வாறான நடைமுறையே இப்போது பின்பற்றப்படுகிறது.

# இப்படியும் நடக்கிறது

**யாழ்.** நகரில் நிகழ்ந்த வன்செயல்களின்போது எரிந்து போன யாழ். பொதுசன நூலகத்துக்கு, சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்யும் பொருட்டு கடந்த முப்பதாம் திகதி இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. டொனல்ட் ருசெயின் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

அன்றைய தினம் பிற்பகல் சுமார் நான்கு மணியளவில் யாழ். மாநகரசபைக்கு வந்திருந்த அமெரிக்கத் தூதுவர்; அங்கு சமுகமளித்திருந்த யாழ். உதவிமேயர், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் பல்துறைகளையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு யாழ். மேயரினால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து நூல்கள் அன்பளிப்பு வைபவம், சிறப்பாக நடைபெற்றது.

நூலகத்துடன் மிகவும் நெருக்கமானவர், நூலகர் (லைப்ரறியன்). இவ்விஷயம் இரகசியமானதல்ல. ஆனால் என்ன நடந்ததோ... கடைசிவரை அமெரிக்கத் தூதுவருக்கு யாழ். பொதுசன நூலகர் அறிமுகம் செய்துவைக்கப்படவில்லை! அது மட்டுமல்ல; அன்றைய நிகழ்ச்சி நிரலில் கூட அறிமுகப்பட்டியலில்-அவரது பெயர் இடம்பெறவில்லை!

| ஊடுருவி

# தொலைக்காட்சியில் பாட போதனை

(கொழும்பு)

தொலைக்காட்சி சேவை மூலம் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு விஞ்ஞான பாடங்களை ஒலிபரப்ப இலங் தேசிய தொலைக்காட்சி சேவையினரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினரும் கூட்டாக ஆலோசனை செய்து வருகின்றனர்.

ஜனவரியில்பரீட்சார்த்தமாக ஒலிபரப்பப்படவிருக்கும் பாட போதனைகளைப் பற்றிய விமர்சனங்களைத் தருமாறு சகல ஆசிரியர்களும் மேற்படி சேவையினரால் கேட்கப்பட்டுள்ளனர்.

விஞ்ஞானபாடங்களான இரசாயனம், பௌதிகம், உயிரியல், தாவரவியல், கணிதம் ஆகியன தேசிய தொலைக்காட்சி சேவையான 'ரூபவாஹினி'' பெப்ரவரியில் இயங்கத் தொடங்கிய பின்னரே முழுமையாகப் போதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தொலைக்காட்சிப் பாட போதனை பெப்ரவரியில் ஆரம்பிக்கப்பட்டதும் தினமும் காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஒலிபரப்பப்படுமெனவும், இச் சேவை மாணவர்களும், ஏனையவர்களும் கிரகிக்கும் வகையிலேயே அமைந்திருக்கும் மெனவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச் சேவை இயக்குனர் திருமதி இரங்கனி குணரட்ன தெரிவித்துள்ளார். (கி)

## காணு நிலைமை

ஆக்ரா, ஜன. 1

காணுவில் நிலைமை சீராக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

தமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடவேண்டாமென்று உலக நாடுகளை இராணுவ அரசாங்கதில் அதிபர் கேட்டுள்ளார்,

## தும்பளை-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தித்துறை நகராளுமன்றத் தலைவர் திரு. எம். வேலும் மயிலும், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. வீ. கே. கணேசலிங்கம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை பிரதிநிதி திரு. விஸ்வலிங்கம், தும்பளை கிராம சேவை அலுவலர் திரு. வி. சேதுநாயகம், திரு. சி. மூ. கந்தசாமி, சட்டத்தரணி திரு. பீ. சுப்பிரமணியம், பரமகுரு, திரு, கதிரவேற்பிள்ளை, திரு. சபாநாயகம், திரு. நடராசா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

ஆலோசனைக் கூட்டத்தில் கண்ணாடித்தொழிற்சாலை, ஐஸ் தொழிற்சாலை, சிறிய அளவிலான கப்பல் கட்டும் தளம், மீன்பிடி நைலோன் வலைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் ஆகியன நிறுவுவதுபற்றி ஆராயப்பட்டது. அத்துடன் பண்ணை வளர்ப்பு, மேய்ச்சல் தரை அபிவிருத்தி, காற்றாலை நீர்ப்பாசனம், உடைதயாரிப்பு பயோகாஸ் உற்பத்தி, காட்டுவள அபிவிருத்தி போன்ற தொழிற்துறைகளை உருவாக்குவது பற்றியும் ஆராயப்பட்டது.

## நெடுந்தீவு...

((1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற ஆலோசனைக் கூட்டத்தைத் தொடர்ந்து யாழ் அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கா. இந்திரபாலா, யாழ். தொல்பொருட்பகுதி பொறுப்பதிகாரி திரு. செல்வரத்தினம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்ரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிடவுள்ளனர்.

## கிரிக்கெட் டெஸ்ட் இங்: 5 - 198

புதுடில்லி, ஜன. 1

இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்குமிடையே கல்கத்தாவில் இன்று ஆரம்பமான 4வது கிரிக்கட் டெஸ்ட்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து கோஷ்டி 5 விக்கட் நஷ்டத்திற்கு 198 ஓட்டங்களைப் பெற்றது. (வெ)

## யாருடையதிறப்பு?

யாழ். பெரியகடை கே.கே.எஸ். வீதியில் மோட்டார்ச் சைக்கிள் சுவிச் திறப்புக் கோர்வை ஒன்றை முஸ்லிம் வட்டாரத்தைச் சேர்ந்த எம். ஐ. என். அலீம் கண்டெடுத்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார், உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

# ஆங்கிலப்பாட போதனைக்கு இளைப்பாறிய ஆசிரியர்கள்

(கொழும்பு)

பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆங்கிலப் பாட ஆசிரியர்களுக்கான தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கமர்த்தப்படவிருக்கின்றனர்.

9,500 அரசாங்கப் பாடசாலைகளுக்கு மேலதிகமாக ஐயாயிரம் ஆங்கிலப் பாட ஆசிரியர்கள் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, அநுராதபுரம், பொலன்நறுவ, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் உள்ள கிராமப் பகுதிகளில் கணிசமான தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு, க. பொ. த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்திலே விசேட சித்தியடைந்த இரண்டாயிரம் பேரை ஆசிரியர்களாக நியமிக்கத் திட்டமிட்டிருந்த போதிலும், விசேடசித்தியடைந்தோரில் அனேகமானோர் கற்பிக்கும் திறமையற்றவர்களாக காணப்படுகின்றனராம். இதன்காரணமாகவே ஆங்கிலப்பாட போதனைக்கு இளைப்பாறிய ஆங்கிலப் பாட ஆசிரியர்களை நியமிக்க ஆலோசிக்கப்பட்டுள்ளது. (கி)

# தாலிக்கொடியின் நிறை திடீரெனக் குறைந்தது

## இளைஞர் தேடப்படுகிறார்

(பச்சிலைப்பள்ளி)

வீட்டுக்குள் வைத்திருந்த தாலிக்கொடியின் நிறை திடீரெனக் குறைந்தது. இதனையடுத்து அயல் அறையில் குடியிருக்கும் இளைஞர் பொலிசாரால் தேடப்படுகிறார்.

பளைப்பகுதியிலுள்ள கட்டைக்காடு என்னுமிடத்தில் உள்ள யாக்கோபு என்பவரின் வீட்டிலேயே இச்சம்பவம் நடைபெற்றது, வீட்டுக்காரப் பெண் கோயிலுக்குச் செல்வதற்காகத் தாலிக்கொடி வைக்கப்பட்ட இடத்திலிருந்து எடுத்து அணிகையில் தாலிக்கொடி மூக்குக்கீழே இறங்காமல் இறுக்கமாக இருந்ததாம். கவனித்தபோது தாலிக்கொடியின் ஒரு பகுதி வெட்டி எடுக்கப்பட்டு ஒட்டப்பட்ட அடையாளம் காணப்பட்டதாம், வீட்டைவிட்டு வெளியில் செல்லும்போது மட்டுமே தாலிக்கொடி அணிவது வழக்கமாம்.

இச்சம்பவம் தொடர்பாக, அவ்வீட்டின் ஒரு அறையில் குடியிருக்கும் இளைஞர் ஒருவர் பொலிசாரால் தேடப்படுகிறார். (அ)

## ஊழியருக்கு சம்பள உயர்வு

(மாவிட்டபுரம்)

அரசாங்கத்தின் 65 ரூபா சம்பள அதிகரிப்பு தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச்சங்க ஊழியர்களுக்கு கடந்த நவம்பர் மாதத்திலிருந்து வழங்கப்படும். இதற்கான அங்கீகாரத்தை சங்கத்தின் பொதுச்சபை வழங்கியுள்ளது.

ஊழியர்களுக்கு வரவு ஊக்குவிப்புப்பணம் வழங்கவும் பொதுச்சபை அங்கீகரித்துள்ளது. இதன் மூலம் மாதம் ஒன்றில் உள்ள எல்லா வேலை நாட்களிலும் ஊழியர் ஒருவர் வேலைக்கு சமூகமளித்திருந்தால் அந்த மாதம் 50 ரூபாவை அந்தஊழியர் ஊக்குவிப்புப்பணமாகப் பெறுவார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

வலதுகுறைந்தோருக்கு, தொழில் வாய்ப்பளிப்பதற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கான சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று மாலை யாழ்ப்பாணம் உதவும் கரங்கள் பணிமனையில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் உட்படபலர் உரையாற்றுவர். (கெ)

## மாவட்ட நீதிபதி

(மாவிட்டபுரம்)

மல்லாகம்மாவட்ட நீதிபதியாக திரு. சீ. வீ. விக்கினேஸ்வரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்,

இவர் முன்பு சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமைபுரிந்துள்ளார்.


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட் உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

**யாழ் - கொழும்பு செவ்வாய், வியாழன் ஞாயிறு**

**கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.**

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்**

[1] ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

[2] யாழ் மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

[3] குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

**கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்**

ஹோம் பிறுன்ஸ் லிமிட்டெட்
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்
இல. 105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

**கட்டணம் ரூபா 65-00**


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஜனவரி மீ 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O. Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.